**DEPOSITION OF WITNESS**

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.No.260/2019**

**PW-6**

**Date :-05.10.2023**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. காளிமுத்து (காவல் உதவி ஆய்வாளர்) | Caste | |
| S/o | திரு. முத்துசாமி | Calling | (காவல் உதவி ஆய்வாளர்) |
| Village | மாயனூர் | Religion | |
| Taluk | கரூர் மாவட்டம் | Age | 59 /2023 |

**எதிரி ஆஜர் எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்-**

**அரசு தரப்பு முதல் விசாரணை-**

நான் தற்போது கரூர் மாவட்டம் மாயனூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளரா பணிபுரிந்து வருகிறேன் . இதற்கு முன் கடந்த பெட்டவாயத்தலை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது 15.12.2017 ம் தேதி இரவு 23.00 மணிக்கு ஏகாம்பரம் மகன் ராஜா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்தஎழுத்துபூர்வ புகாரை பெற்று விசாரணை செய்து நிலைய குற்ற எண் . 229/2017 சட்டபிரிவுகள் 279, 304(A) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் அந்த முதல் தகவல் அறிக்கை அ .சா.ஆ.3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. பின்னர் மேல் விசாரணைக்கா வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன் காவல் ஆய்வாளா என்னை விசாரணை செய்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-

காவல் நிலைய எல்லைக்குட்பட்ட நீதிமன்றத்திற்கு காவல் நிலைய நீதிமன்ற காவலர் செல்வது உண்டு என்றால் ஆமாம் . முதல் தகவல் அறிக்கையை 12 நாட்கள் காலதாமதாக அனுப்பியதற்கு என்ன காரணம் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் உடனடியாக அனுப்பபட்டுள்ளது . புகார் தாரர் இந்த புகாரை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல . நான் சரிவர விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த புகாருக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**– Sd – xxx**

Taken down by me in open court , read over
to his and accepted by him as correct and
made his signature

**– Sd – xxx**

District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam